# மின்நிலா

அக்டோபர் 19, 2020



Photo from P S Mani, Bangalore

மின்நிலா 022

engalblog.blogspot.com

# எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

நன்றி.

**Layout by : KGG :**

============


**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**


மின்நிலா 021 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

ஆடிப்பால் - ரமா ஸ்ரீனிவாசன் ரெஸிப்பி........................................2
கதை : ஓவியம் - துரை செல்வராஜூ..........................................6
கேள்வி பதில்கள்....................................................................12
**எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ..............................16**
இதுல நீங்க எப்படி?::ஸ்ரீராம்...................................................18
**கதம்பம் :: ஸ்ரீராம்**...............................................................22
பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்......................................................29
**நேர்மறை** செய்திகள்.............................................................33
பேசும் படங்கள் :: kayjee.......................................................45
**தகவல் பலகை உறவினர்கள் வீட்டு 2020 கொலு :: KGG......... 64**
**குழந்தைகளை குதூகலிக்கச் செய்வீர் ! KGG..................................71**

குறிப்பு :

**நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.**

## ஆடிப்பால் - ரமா ஸ்ரீனிவாசன் ரெஸிப்பி

தமிழ் மாதங்களில் யாவரும் ஆவலுடன் எதிர் நோக்கும் மாதம் ஆடியாகத்தான் இருக்கும். ஏனெனில் ஆடி மாதப் பிறப்பிலிருந்து பண்டிகைகள் வரிசை போட்டுக் கொண்டு நம் வீடு தேடி வர வாசலில் காத்துக் கொண்டிருக்கும். புதுத் துணிகள், புதுப் பண்டிகைகள், புது வரவுகள் என ஆடி முதல் ஒரே கொண்டாட்டம்தான்.

வைணவக் குடும்பங்களில் ஆடி மாதப் பிறப்பு என்பது ஓர் திருமண விழாவிற்கான முக்கியத்துவத்தை இன்றும் சுமக்கிறது. ஒவ்வொரு ஆடி மாதப் பிறப்பன்றும் வைணவ இல்லங்களில் இன்றும் ஆடிப் பால் காய்ச்சுவது ஒரு மகிழ்ச்சியான வழக்கம்.

திருமணத்திற்குப் பின் வரும் முதல் ஆடி மாதப் பிறப்பன்று மாப்பிள்ளையையும் வீட்டுப் பெண்ணையும் பெண் பிறந்த இல்லத்திற்கு அழைத்து விருந்தோம்பி மகிழ்வது வழக்கம். இதில் மிக முக்கியமான சடங்கானது புத்தம் புது வெள்ளி டம்ளர் வாங்கி வீட்டிற்கு வந்த மாப்பிள்ளைக்கு அதில் ஆடிப் பால் வழங்கி குடும்பத்தார் மகிழ்வதேயாகும்.

அந்தக் காலத்தில், திருமணத்திற்கு பின் வீட்டுப் பெண் என்பவள் அடிக்கடி வருகை தருவது கடினமாதலால் இம்மாதிரியான சடங்குகளை சாக்கிட்டு பெண்ணையும் மாப்பிள்ளையையும் அழைத்து கௌரவிக்கும் சாக்கில் அவர்களை பார்க்க ஓர் மகிழ்ச்சியான ஏற்பாடாய்தான் நான் இப்பண்டிகையைப் பார்க்கின்றேன்.

அந்த சுவை மிக்க ஆடிப் பால் எவ்வாறு காய்ச்சுவது என்பதுதான் என்னுடைய இன்றைய ரெசிப்பியாகும்.

நாங்கள் ஐந்து நபர்கள் கொண்ட குடும்பம் என்பதால், நான் எங்கள் குடும்ப அளவிற்கேற்ப ஒரே ஒரு ஃப்ரெஷ்ஷான தேங்காயை அப்போது உடைத்து நன்றாக முழு தேங்காயையும் துருவிக் கொண்டேன்.

வேண்டிய பொருட்கள் :

தேங்காய் : 1

வெல்லம் : ஒரு பெரிய கப் (எங்களுக்கு அதிகம் இனிப்பு வேண்டியிருக்காததால், நான் ஒரு பெரிய கப் என்று கூறுகிறேன். உங்கள் வசதிக்கு நீங்கள் வெல்லம் சேர்த்துக்கொள்ளுங்கள்)

ஏலக்காய் (அ) ஏலப்பொடி : ஒரு சிறிய ஸ்பூன் (அ) 2 (அ) 3 முந்திரி பருப்பு : 10 பருப்புகள் உங்களுக்கு வேண்டுமானால் பச்சை கற்பூரம், குங்குமப் பூ ஆகியவை சேர்த்துக் கொள்ளலாம். தேங்காய் பாலின் சுவை குறைந்து விடும் என்பதால் நாங்கள் எதையும் சேர்ப்பதில்லை.

செய்முறை :

முதலில் தேங்காயை உடைத்து நன்றாகத் துருவிக் கொள்ளவும்.




அத் தேங்காய்த் துருவலை மிக்ஸியில் சேர்த்து முதல் முறை அரைக்கும் போது நீர் சேர்க்காமல் நன்றாக அரைக்கவும்.



அந்தப் பாலையும் அரைத்த விழுதையும் சேர்த்து வடிகட்டியில் போட்டு நன்றாக கீழே ஓர் பாத்திரத்தை வைத்து பாலை மட்டும் வடிகட்டி
எடுத்துக் கொள்ளவும். இரண்டு அல்லது மூன்று முறைகள் சிறிது நீர் சேர்த்து இதே போல் அரைத்து மறுபடியும் வடிகட்டி, வடிகட்டி பாத்திரத்தில்
சேர்த்துக் கொள்ளவும். எங்கள் வீட்டில் மூன்று முறைகள் மட்டுமே அரைப்போம்.




இப்பொழுது அந்த வடிகட்டிய தேங்காய்ப் பால் பாத்திரத்தை அடுப்பில்
வைத்து வேண்டிய வெல்லத்தை சேர்த்துக் கொள்ளவும். ஏலக்காய் அல்லது ஏலப் பொடியை பாலுடன் சேர்த்து சுமார் பத்து நிமிடங்கள் நன்றாக வெல்லம் கரைந்து கொதிக்கும் வரை அடுப்பில் கொதிக்க விட்டு இறக்கி வைக்கவும்.



இப்போது ஒரு ஸ்பூன் நெய்யில் முந்திரி பருப்புகளை முழுதாகவோ அல்லது பாதியாகவோ உடைத்தோ வறுத்து தேங்காய்ப் பாலுடன் சேர்க்கவும்.

அவ்வளவுதான். சுவையான ஆடிப் பால் அல்லது தேங்காய்ப் பால் தயார்.



இது செய்வது மிகவும் சுலபம். சாப்பிடுவது மிகவும் இன்பம். செய்து பாருங்கள் நண்பர்களே...

ஒரு சிறிய டிப்ஸ். ஒரே நேரத்தில் ஒரு டம்ளருக்கு மேலே அருந்தினால் சில சமயத்தில் தலை சுற்றுவது போல் இருக்கும். ஆகவே, ஜாக்கிரதையாக அருந்துங்கள். வைத்து மதியம் கூட சுட வைத்து அருந்தலாம். ஆடிப் பால் ஆடிப் பால்தான்.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கதை : ஓவியம் - துரை செல்வராஜூ

1970 ஜூன் மாதம்.. ஆறாம் தேதி...

அந்த அழகான சிற்றூர் மாதத்தின் முதல் நாளில் இருந்தே பரபரப்பாக இருந்தாலும் அன்று மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது...

காரணம் - அவ்வூரின் அரசினர் உயர்நிலைப் பள்ளி கோடை விடுமுறைக்குப் பிறகு திறக்கப்படுகின்றது....

கடலை, உளுந்து, பயறு - விற்று சிறுவாடாக சேர்ந்திருந்த காசு எல்லாம்
பேனா பென்சில் புத்தகம் என்றும் வெள்ளைச் சட்டை காக்கி டிராயர் என்றும் வெளிர் நீலப் பாவாடை என்றும் தாவணி என்றும் மஞ்சக் கலர் ரிப்பன் என்றும் மாறிக் கொண்டிருந்தன...

பதினொன்றாம் வகுப்புப் பசங்களில் ஒரு சிலர் புத்தம் புதிய சைக்கிளுடன்
...

புது சைக்கிள் வாங்கணும்... ன்னா இந்தப் பக்கம் கும்மோணம்.. அந்தப் பக்கம் .. மாயவரம்...

இங்கேயே ஒரு சைக்கிள் ஸ்டோர் இருந்தாலும் புது சைக்கிளின் விலை இருபது முப்பது ரூபாய் கூடுலாக இருக்கும்...

அதனால ஜனங்கள் சைக்கிள் டயர், டியூப், டைனமோ பல்ப், பிரேக் கட்டை, சீட் கவர் - இதுகளை மட்டும் இந்த கிராமத்தில் வாங்கிக்கிட்டு புது சைக்கிளை மட்டும் கும்மோணத்தில் இருந்து வாங்கிக்கிட்டு வருவாங்க...

" டே.. மச்சான்... சைக்கிள் சீட்டு ஒரிஜினல் புரூக்ஸ் இல்லேடா... நல்லா ஏமாந்துட்டே.... இதுக்காகவா அங்கே நீ போனது.. காசு தெண்டமாயிடுச்சே... டா!... "

அவ்வப்போது இப்படியான பரிகாசங்களும் நடக்கும்...

" தம்பி... எங்க பொழப்பு தான் வாய்க்கா வரப்பு தோட்டம் துரவு..ந்னு ஆகிப் போச்சு... நீயாவது நல்லா படிச்சு ஆபீசு வேலைக்குப் போவணும்... "

" சரிப்பா!... "

தன்னருகில் பேசிக் கொண்டே வருபவர்களைப் புன்னகையுடன் நோக்கினான் சரவணன்...

அந்தப் பையன் நடுநிலைப் பள்ளியில் இருந்து தேர்ச்சி பெற்று ஹைஸ்கூலுக்கு வருகிறான் என்பது நன்றாகத் தெரிந்தது..

இருந்தாலும் கேட்டான்...

" எந்தக் கிளாஸ்?... "

" ஒம்பதாப்பு!... " - அந்தப் பையனின் கண்களில் கொஞ்சம் மருட்சி...

" அதெல்லாம் பயப்படக்கூடாது!... தைரியமா இருக்கணும்... நல்லா படிச்சு முன்னுக்கு வரணும்!... " - மறுபடியும் சரவணன் முகத்தில் புன்னகை...

" தம்பி.. நீங்க என்னா படிக்கிறீங்க?.. " அந்தப் பையனின் அப்பா கேட்டார்...

" இந்த வருசம் எஸ்ஸெல்சி... பதினொண்ணாவது!... "

" யப்பா... இந்தா இருக்கு நோட்டுப் புத்தகம் விக்கிற கடை!.. "

ஆவலுடன் அந்தச் சிறுவன் சொன்னதைக் கேட்டதும் சரவணன் குறுக்கே புகுந்தான்..

" இப்போதைக்கு ரெண்டு நோட்டு மட்டும் வாங்கிக்குங்க... ஸ்கூல்ல சார் சொல்றதைக் கேட்டுக்கிட்டு அப்புறமா வாங்கிக்கலாம்!... "

" இதுவும் நல்ல யோசனைதான்.. சரி... தம்பி நீங்க முன்னால போங்க... ரெண்டு நோட்டு வாங்கிக்கிட்டு பின்னாலயே வர்றோம்... "

- என்றார் அந்தப் பையனின் தந்தை..

அவர்கள் அங்கேயே நின்று கொள்ள அந்த வேளையில் சக்திவேல் புத்தம் புது சைக்கிளில் வந்து காலை ஊன்றினான்...

சக்திவேல்.. சரவணனின் கூட்டாளி.. பக்கத்துக் கிராமத்தில் இருந்து வருபவன்...

ஆறாம் வகுப்பில் இருந்தே ஒன்றாகப் படிப்பவன்...

" டே.. சக்தி!... " உற்சாகமானான் சரவணன்..

" மதுரைக்கெல்லாம் போய்ட்டு என்னைக்குடா வந்தே!... நான் முந்தா நாள் உன் வீட்டுக்கு வந்தேன்.. தெரியுமா?... "

சரவணன் சக்தியின் தோளைத் தழுவிக் கொண்டான்..

" நீ வந்துட்டுப் போனதை அம்மா.. சொன்னாங்கடா... நான் நேத்து மத்தியானமா மதுரையில இருந்து வந்தேன்.. விடிகாலைல கிளம்பி தஞ்சாவூர் வர்றதுக்கே பதினோரு மணி ஆச்சு... அங்கேருந்து கும்மோணம் வந்து நம்ம ஊர் பஸ்ஸைப் புடிச்சு... வீட்டுக்கு வந்தப்போ ஒன்ற மணி... "

" மதுரையில ஜாலியா ஊர் சுத்தியிருப்பே!... "

பேசிக் கொண்டே இருவரும் நடந்தார்கள்..

" ஆமாடா... மீனாட்சியம்மன் கோயிலுக்கே மூணு நாள் போனோம்.. அவ்ளோ பெரிய கோயில்... அப்புறமா மஹாலுக்குப் போனோம்.. திருப்பரங்குன்றம் அழகர் மலைக்குப் போனோம்... வைகை அணைக்கும் போனோம்... அங்கே எடுத்த போட்டோ..ல்லாம் ஆல்பமா வைச்சிருக்கேன்.... கிளாஸ்க்குப் போய் பார்க்கலாம்... "

நண்பர்கள் இருவர் முகத்திலும் சந்தோஷ வெள்ளம்...

" சைக்கிள் எப்படா வாங்குனது?... "

" நா மதுரையில இருக்குறப்பவே மாமா இங்கே அம்மாவுக்கு பணம் அனுப்பி வச்சிட்டாங்க... அப்பா மாயவரத்துல இருந்து வாங்கிட்டு வந்துருக்காங்க!... "

" சைக்கிள் நல்லா இருக்கு... அது சரி!.. ஆயுத பூஜை மாதிரி இது என்ன பூச்சரம் பொட்டு எலுமிச்சம் பழம் எல்லாம்!... "

புன்னகைத்தான்..

" தாத்தா தான்டா... முதல் நாள் ஸ்கூல்..ந்னு பூவெல்லாம் போட்டு எலுமிச்சம் பழம் குத்தி விட்டாங்க... "

" டே... சக்தி.. கணக்குல தான் எனக்கு மார்க் குறைஞ்சிடுச்சாம்... சேகர் சார் அப்பாகிட்ட கொளுத்திப் போட்டிருக்கார்... வீட்ல ஒதைக்காத குறை!... "

" எப்படியோ நானும் தப்பிச்சேன்... இந்த வருசம் எஸ்ஸெல்சி... ஊரச் சுத்தாம ஒழுங்காப் படிச்சு நல்ல மார்க்.. எடுத்துடணும்டா சரவணா!.. "

பேசிக் கொண்டே பள்ளி வளாகத்துக்கு வந்து விட்டார்கள்..

ஒரே ஆரவாரம்.. சந்தோஷமும் பதற்றமும் விரவிக் கிடந்தன.. நூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள்..

வேப்ப மரத்து நிழலில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களோடு இந்த சைக்கிளையும் நிறுத்திப் பூட்டி விட்டு அந்தப் பெரிய மாமரத்தை நோக்கி நடந்தார்கள்..

தலைமை ஆசிரியர் அறைக்கு எதிரில் இருந்த மா மரத்தின் கீழ் நாலைந்து போர்டுகளை வைத்து அவற்றில் மறுபடியும் தேர்ச்சிப் பட்டியல்களை ஒட்டியிருந்தார்கள்...

அருகிலேயே தங்கமணி டீச்சரும் மாலதி டீச்சரும் - புதிதாக பள்ளிக்கு வரும் மாணவ மாணவியரை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர்...

மாலதி டீச்சரும் சரவணனும் ஒரே தெருவாசிகள்... அவங்க அப்பா உள்ளூர் போஸ்ட் மேன்...

இங்கே சரவணனின் அப்பா எண்ணெய்க் கடையும் அரிசி மண்டியும் நடத்திக் கொண்டிருந்தார்...

" வாங்க துரைங்களா!.. எப்படியோ தப்பிச்சிட்டீஙக!.. வீட்ல மண்டகப்படி நடந்திருக்குமே!... "

மாலதி டீச்சர் கேள்வியுடன் சிரித்த போது ' You too?.. ' என்று தோன்றியது...

" டீச்சர்... எல்லாக் கணக்கும் நல்லாதான் போட்டிருந்தேன்!... "

சரவணன் பரிதாபமாகச் சொன்னான்...

" அப்போ சேகர் சார் மார்க் போடலைங்கறியா?.."

" இந்த அல்ஜீப்ரா தான்!..." - சக்தி தனது பங்கிற்கு ஆரம்பித்ததும் -

" உனக்கென்ன!... வாய்க்கால் வரப்பு தோட்டம் துரவுன்னு ஏகத்துக்கும் நீ வசதியானவன்... இவனைச் சொல்லு... எண்ணெய்க் கடைக்கு முதலாளியா உட்கார்ந்தாலும் தொழிலாளியா நின்னாலும் கணக்கு வழக்கு தெரிஞ்சாகணுமே!.. "

தங்கமணி டீச்சர் நிஜமாகவே வருத்தப்பட்டார்...

" டீச்சர்.. ரெட்டை ஜடை ஜானகி ஸ்கூலுக்கு வரலையா!... "

" கேட்டீங்களா டீச்சர்... பசங்க பேசறதை!..."  மாலதி டீச்சரின் முகத்தில் இளநகை..

" மீசை முளைக்க ஆரம்பிச்சாச்சு இல்லே..  அதான்!... போங்க... போய் லெவன்த் - ஏ க்ளாஸ்ல உட்காருங்க எருமைகளா!.. "

தங்கமணி டீச்சரும் புன்னகைத்தார்...

ஒரு வழியாக வகுப்பறைக்குள் வந்தாயிற்று...

உள்ளிருக்கும் வானரங்களின் சத்தத்தோடு சத்தமாக நடு வரிசை டெஸ்க்கில் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்..

சக மாணவர்கள் சூழ்ந்து கொள்ள புத்தகப் பைக்குள் இருந்து போட்டோ ஆல்பத்தை எடுத்து விரித்தான் சக்திவேல்.....

பளிச் - என கறுப்பு வெள்ளைப் படங்கள்...

அவனிடமிருந்து ஆல்பத்தைப்  பிடுங்கி தங்களுக்குள் புரட்ட ஆரம்பித்தனர் நண்பர்கள்..

" இன்னொண்ணும் இருக்கே!.. " - என்றபடி ஒரு சிறு பெட்டியை எடுத்து விரித்தான்..

வெள்ளைப் பீங்கான் தட்டில் நேர்த்தியாக வரையப்பட்ட அக்ரிலிக் ஓவியம்...

இலைகளும் மொட்டுகளுமாகத் தண்ணீரில் தத்தளிக்கும் தாமரை..  அதனருகில் துள்ளிக் குதிக்கும் வெள்ளி நிற மீன்...

" மதுரை பஸ்டாண்டுல ஒருத்தர் உடனுக்கு உடனே வரைஞ்சு கொடுத்துக்கிட்டு இருந்தார்...  முப்பது ரூபாய் கொடுத்து வாங்கினேன்.. "

"மீனும் தாமரையும் அழகா இருக்குடா!..  நம்ம வசந்தியும் தான் இந்த மாதிரி அக்ரிலிக் படமெல்லாம் வரைவாளே.. உனக்குத் தெரியாதா!... "

சரவணன் மெதுவாகச் சொன்னான்...

" ஆமால்லே!... மறந்தே போய்ட்டேன்!.. வசந்தி எங்கடா?.. " - ஆவலுடன் தேடினான் சக்திவேல்...

வசந்தி - ரெவினியூ இன்பெக்டரின் மகள்...

அவங்க அப்பாவுக்கு டிரான்ஸ்பர்!... குடும்பத்தோட சீர்காழிக்குப் போய்ட்டாங்க!..

## மின்நிலா 022

" வசந்தி தான் டா.. டிராயிங்ல பெஸ்ட்!.. இந்த ஸ்கூல்லயே அவ தானே பர்ஸ்ட்!.. அவ கிட்டே ஆட்டோக்ராப் வாங்குறதுக்கு மறந்து விட்டேன்!... "

வருத்தம் பரவியது சக்தியின் முகத்தில்...

பெரிய கண்ணாடியில் பச்சைப் பசுந்தளிர்களுடன் ரோஜாப்பூவும் அதைச் சுற்றும் வண்ணத்துப் பூச்சியுமாக வசந்தி வரைந்த ஓவியம் அவன் நினைவுக்கு வந்தது..

சக்திவேல் முணுமுணுத்த வேளையில் சரவணன் சொன்னான்....

" வசந்தி வரைஞ்ச ரோஜாப்பூ அக்ரிலிக் எங்கிட்ட... இருக்கு!... "



மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கேள்வி பதில்கள்

## பெண் பார்க்கச் சென்ற அனுபவங்கள்!

**நெல்லைத் தமிழன்:**

**சமீபத்தில் "ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே..." ஸ்லோகத்தை வீட்டில் சொன்னால் 100 முறை விஷ்ணு சகஸ்ரநாமம் சொன்ன பலன், கோவிலில் சொன்னால் ஆயிரம் முறை .. .. என்றெல்லாம் படித்தேன். நாம் ஏன் இப்படி குறுக்கு வழியில் புண்ணியம் தேடிக்கொள்ளணும் என்று நினைக்கிறோம்? ராம நாமத்தின் உயர்வைச் சொல்வதற்கான ஒரு ஸ்லோகத்தை வைத்துக்கொண்டு, சஹஸ்ரநாமமே சொல்லவேண்டாம், இந்த இரண்டு வரிகளைச் சொன்னாலே போதும் என்கிற மாதிரி நம் மனம் ஏன் புரிந்துகொள்கிறது?**

**# ஒரு சிறு அளவேனும் ஆத்திக உணர்வு ஒரு பழக்கமாக இருக்கட்டுமே என்ற நல்லெண்ணத்தில் இந்த மாதிரியெல்லாம் சொல்லப் படுகிறது.**

**மேலும் பரமசிவன் இப்படி "ஸ்ரீராம ராம ராமேதி " சொன்னால் ஆயிரந் திருநாமமுரைத்த நற்பலன் என்று சொல்லியதால் அதற்கு ஒரு ஏற்றம் உண்டாகி விட்டது.**

**நம்பிக்கை பாற்பட்ட விஷயங்கள் தர்க்கத்துக்கு ஏற்றதில்லை.**

**$ அந்த மாதிரி வேண்டுதல்கள் பலனும் பொன்னுக்கு பதில் பூ என்ற வகையில் இருந்தால் உங்களுக்கு சம்மதமா?**

**& உபநயனம் செய்து வைத்த பின் என் அப்பா கொஞ்ச நாளைக்கு சந்தியாவந்தனம் செய்யக் கற்றுக்கொடுத்தார், (இன்று - 14 th October என் அப்பாவின் 113 ஆவது பிறந்தநாள் ) ஒரு மாதம் பள்ளி விடுமுறை நாட்களில் மட்டும் ஸந்த்யாவந்தனம் செய்தேன். தொலைவில் அமைந்திருந்த பள்ளிக்கூடம் (தொழில் கல்வி பள்ளி என்பதால்) காலை ஏழு மணிக்கு வீட்டைவிட்டு புறப்பட்டுச் சென்று மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புவேன். எனவே தினமும், முடிந்த அளவு காயத்ரி ஜபம் மட்டும் சொல்லச்சொன்னார். கடந்த ஐம்பத்துநான்கு வருடங்களாக அதை மட்டும் விடாமல் செய்துவருகிறேன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. இது குறுக்கு வழி அல்ல; என்னால் இயன்ற ஒரே வழி!**

**உங்களுக்கு ரொம்பப் பிடித்த பொழுது போக்கு எது?**

# அவ்வப்போது வெவ்வேறு. காசில்லா சீட்டாட்டம் ஒரு சமயம், கர்நாடக இசை எப்போதும், ஷேர் மார்க்கெட் ஸ்டடன்ட்டுகள், ஆன்மிக நூல், ஸ்டாண்ட் அப் காமெடி, கன்னடம் படிக்கக் கற்றல்.

$ பிடித்த பொழுபோக்கு தூங்குவது !

& எங்கள் blog, மின்நிலா, facebook, whatsapp. TV news, amazon kindle, ஓய்வு எடுக்க நினைக்கும்போது (பெங்களூர் குளிரில்) நன்றாக போர்த்திக்கொண்டு படுத்துவிடுவது. (+ இந்த சீசனில் ஐ பி எல் கிரிக்கட் பார்ப்பது )

**மனைவிக்குன்னு (ஒவ்வொருவருக்கும்) தனிப்பட்ட ஸ்பேஸ் இருக்கு என்பதை எத்தனை பேர் ஒத்துக்கொள்கிறோம்? அல்லது குடும்பமாக வாழும்போது தனிப்பட்ட ஸ்பேஸ் என்பதே அர்த்தமில்லாததா?**

# எந்த சூழ்நிலையிலும் மனைவிக்கு என்று ஒரு பிரத்யேக இடம் கட்டாயம் இருக்கிறது. சில சமயம் மனைவியே அதை உணர்வதில்லை அல்லது இருப்பதாக எண்ணுவதில்லை என்பதே சோகம்.

& நான் ஒத்துக்கொள்ளவேண்டும் என்றெல்லாம் அவர் எதிர்பார்ப்பதில்லை. எனக்கு வேண்டிய ஸ்பேசை அவரிடமிருந்து நான் யாசகமாகப் பெற்றுக்கொண்டு காலம் கடத்துகிறேன்!

**கொரோனாவால் ஏற்பட்ட நல்லது என்ன?**

$ நாம் அலுவலகத்தில் தலை காட்டாமல் இருந்தாலும் அலுவல்கள் நடக்கும்
கடைசி மைலை நடத்திக் கொடுக்க ஆயிரக் கணக்கில் மக்கள்.

இந்த நோய் நமக்கு வராது என்பதோ வந்தால் மரணம் என்பதோ உண்மையல்ல.

நோய் வராமல் இருக்கப் பணக்கவசம் போதாது. மருத்துவ சேவையில் இருப்பவருக்கும் குடும்பத்தாருக்கும் பாதிப்பு அதிகம்.

# கூட்டம் கூடித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.
பாதிக்கும் மேலே வீட்டிலிருந்தபடி அலுவலக வேலை செய்ய இயலும்.
பள்ளி செல்லாமல் கற்க இயலும்.
பிறரை அநாவசியமாக நெருங்காதிருப்பது எளிது. இதெல்லாம் தெரியவந்தது.

& (தியேட்டர்களில் பார்க்கப்படும்) சினிமா, சீரியல் என்ற பெயரில் வரும் குடும்ப உறவுகளைக் கெடுக்கும் அபத்தங்கள் எல்லாம் இன்றி மனிதர்கள் சந்தோஷமாக வாழ இயலும் என்னும் உண்மை.

ஒருத்தருக்கு கதாசிரியர்கள் கதைகள் பத்தி பேசுவது பிடிக்குறது. சிலருக்கு உணவு. சிலருக்கு அரசியல். எல்லோருக்கும் பிடித்த டாபிக் எது?

# எதிரில் இல்லாத யார் தலையையாவது உருட்டுவது ?

& சுற்றி வளைத்துக்கொண்டு நீங்க எங்கே வருகிறீர்கள் என்று தெரிகிறது! நாராயண, நாராயண (நம் 'EB வாட்ஸ் அப்' குழு உறுப்பினர்கள் வரிசையாக வரவும்!) நாராயண, நாராயண!

பானுமதி வெங்கடேஸ்வரன்:

தங்கள் அனுபவங்களை பாடமாக படிப்பவர்கள் வெற்றி அடைகிறார்கள் எனலாமா?

# அனுபவங்களிலிருந்து பாடம் கற்பது அவ்வளவு எளிதில்லை. அதை சாதிக்க முடிந்த எல்லாரும் பாடங்களைப் பயன்படுத்துவதும் அதில் வெற்றி பெறுவதும் அதிகம் காணப்படுவதல்ல.

& உண்மைதான். அனுபவங்களிலிருந்து கிடைக்கின்ற பாடங்கள் என்றுமே மறக்காது.

இதோடு எது வெற்றி? என்ற கேள்விக்கும் பதில் சொல்லி விடுங்கள்.

# பலகாரத்தில் சிறந்தது இட்லியா தோசையா, நாட்டுக்குத் தேவை ஆணா பெண்ணா மாதிரியான கேள்விகள் சாலமன் சாரிடம்தான் எழுப்ப வேண்டும்.

& வெற்றி என்பது, நாமே முன்பு நிர்ணயித்துக்கொண்ட ஓர் இலக்கை அடைவதுதான். அந்த இலக்கை அடைந்தவுடன், மேலும் ஓர் இலக்கை நிர்ணயம் செய்து அதை நோக்கி பயணிக்கவேண்டும். இலட்சியத்தை நோக்கி செல்லும் பயணம் என்பது முடியாத தொடர். In that race, there is no finish line.

நீங்கள் பெண் பார்க்கச் சென்ற அனுவங்களை பகிர முடியுமா? எத்தனை பெண்களை பார்த்தீர்கள்? அப்போது அந்தப் பெண் என்ன பாடல் பாடினார்? அல்லது நீங்கள் பாடினீர்களா?

$ ஒரே ஒரு பெண் மட்டுமே. பாடினார். ஸ்ரீ ரகுகுல..
பின்னர் சுத்தானந்த பாரதியின் சொந்தக்காரர் என்று சொன்னதும், அவர் பாட்டு ஒன்று பாடேன் என்று என் பெற்றோர் கேட்டுக்கொண்டனர்.

சுத்தானந்த பாரதிக்கு இவ்வளவு தீர்க்க தரிசனமா என்று எல்லோரும் வியக்கும்படி ஒரு பாட்டு பாடினார் - - - " சுப்ரமணியனை மறவாதிரு மனமே " என்று !
என் பாடல் திறன் பற்றி நான் ஏதும் சொல்லப்போக, காரொனா போல இருக்கு..ஒரு டெஸ்ட் எடுத்துடுங்க என்ற உபதேசம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் !

# கேள்வி படித்த பின் நினைவு படுத்திச் சொல்கிறேன்.

மூன்று முறை பெண் பார்த்தல் நடந்தது.

1 பெண் அற்புதமாகப் பாடினார். பூர்வி கல்யாணி ராகத்தில் பாடல் நினைவில்லை. பொருந்தாத அம்சங்களால் அதோடு நின்று போனது.

2. பெண் பாடவராது என ஒப்புக் கொண்ட கேஸ். அப்பா இல்லாத பெண். பிள்ளையின் அப்பா, பெண்ணின் பெரியப்பா இடையே புரிதல் இல்லை.

3. பெண் நன்றாகப் பாடுவார் என்று திருமணத்துக்குப் பின் தெரிந்தது.

& நான் பார்க்கச் சென்ற (ஒரே) பெண், என்னுடைய அத்தையின் பேத்தி. ஆனால் அவளை அது வரை பார்த்ததில்லை. அந்தப் பெண்ணும் என்னைப் பார்த்ததில்லை. அவள் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே மதுரை, கோவை. இரண்டுமே நான் அதுவரை செல்லாத ஊர்கள். சொந்தம் என்பதால், அவர்கள் எல்லோரும் குரோம்பேட்டையில், அருகில் இருந்த என் அக்கா வீட்டிற்கு வந்திருந்தனர். சொஜ்ஜி பஜ்ஜி எல்லாம் - அவர்கள் வீட்டு சார்பில் என் அக்கா செய்திருந்தார்! சென்றது முதல், பெண் வாயைத் திறந்து ஒன்றுமே பேசவில்லை. (ஹூம் - இப்போ எல்லாம் அப்படி இல்லையே ! சிவாஜி குரலில் படிக்கவும்) யாரோ #? 'பாட்டுப் பாடத் தெரியுமா' என்று கேட்டவுடன், அவள் "பாட்டெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் கற்றுக்கொண்டு பாடுகிறேன்" என்றாள்! அந்த 'எம் ஆர் ராதா' குரலைக் கேட்டதுமே நாங்க எல்லோரும் கப் சிப் (அதாவது காபி 'கப்'பை 'சிப்' பண்ண ஆரம்பித்துவிட்டோம்!)
ஆனால் - இப்போ, என்னை விட நல்ல குரல் அவளுக்குத்தான்!

===============

மின் நிலா தீபாவளி மலர்
உங்கள் படைப்புகளை
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
நன்றி.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# இதுல நீங்க எப்படி?::ஸ்ரீராம்

எப்போது ஆரம்பித்தது என்று தெரியவில்லை, ஒரு கையை காதுக்கு அருகில் தலைக்கடியில் வைத்துக் கொண்டு தூங்கும் பழக்கம்! யோசித்துப் பார்த்தபோது முன்னர் அப்படி தூங்கியதில்லை என்று தெரிந்தது.

**கொஞ்ச நேரத்தில் அந்த போஸ் அசௌகரியமாக இருப்பது போல உணர்ந்தாலும், மாற்றி படுத்தால் தூக்கம் வரவில்லை. ஆனால் தூங்கியபின் கொஞ்ச நேரம் கழித்து கை பொசிஷன் மாறி விடுகிறது என்று நினைக்கிறேன்.**



**கொரோனா காலத்தில் தொடங்கியதோ இந்தப் பழக்கம் என்று தோன்றுகிறது. மூச்சுத்திணறல் வராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்ற உணர்வில் நிமிர்ந்து படுப்பதைத் தவிர்த்திருப்பேனோ, என்னவோ!**

**தூங்கும் ஜோசியம் ஒன்று முன்னர் சுற்றி வந்தது. நிமிர்ந்து படுத்தால் இப்படி, இடதுபக்கம் படுத்துத் தூங்கினால் அப்படி என்று ஜோசியம் சொல்லியிருப்பார்கள். இதற்கு என்ன ஜோசியமோ!**

**முன்னர் எப்படிப் படுத்துத் தூங்குவேன் என்று யோசித்துப் பார்த்தேன். கையை நெஞ்சின் மேல் வைத்தபடியா, உடலோடு ஒட்டி நீளமாக வைத்தா என்று ஞாபகமில்லை. ஆனால் இப்போது இந்தப் பழக்கத்தை எப்படி மாற்ற முயன்றாலும் முடியவில்லை. என்னை அறியாமல் பத்து வினாடிகளில் கை**

அப்படி சென்று விடுகிறது. என்ன கஷ்டம்? கொஞ்ச நேரம் (என்று நான் நினைத்துக்கொள்வேன்) கழித்து கையை எடுக்கும்போது மரத்துப்போயிருக்கும்!

இத்தனைக்கும் தலைக்கு உயரம் தேவையாய் இருக்கிறதோ என்று யோசித்து தலையணை எண்ணிக்கையை அதிகரித்தும் பார்த்தேன். அப்படியும் கை அப்படிதான் போகிறது.



மற்றவர்களை கவனித்தேன். பாஸ் யாரிடமோ பல்வலி என்று சொன்னால் கையை எப்படி வைத்துக் காட்டுவாரோ அப்படி வைத்துத் தூங்கத் தொடங்கினார். மகன் கையை கன்னத்துக்குக் கீழே கொடுத்து 'அட.... அப்படியா? பார்றா!" என்று ஆச்சர்யப்படும் பாவனையில் தூங்கத் தொடங்கினான். இளையவன் எப்படி வேண்டுமானாலும் தூங்கினான்.!

தன்னிச்சையாக நிகழும் செயல்களை நாம் கவனிக்கத் தொடங்கினால் இப்படி அனர்த்தம் விளைகிறதோ என்றும் தோன்றுகிறது. நாம் பேசும் சில வார்த்தைகள், நம் நடை, நமது ரெகுலர் மேனரிஸங்கள்... அனிச்சையாய் நாம் செய்யும் எந்த செயலையும் மறுபடி மறுபடி யோசித்து அல்லது கவனித்துப் பாருங்கள்... அந்த செயல்களில் ஒரு தடுமாற்றம் வரலாம், அல்லது செயற்கையாய் உணரலாம்.

தூக்கம் வந்தால் தூங்கிவிட வேண்டும். இதெல்லாம் வேண்டாத ஆராய்ச்சி. தூக்கம் வராத கொரோனா இரவுகளில்தான் இந்த ஆராய்ச்சி என்னிடம் வந்தததது!

கொரோனா காலத்தில் கிங் இன்ஸ்டிட்யூட்டில் அட்மிட் ஆகியிருந்தவர் சொன்னது, அங்கு கொரோனாத் தொற்றுக்காக அட்மிட் இருந்தவர்களை குப்புறப் படுத்துதான்

தூங்கப் சொன்னார்களாம். நுரையீரல்கள் விரிவடையும், ஆக்சிஜன் பற்றாக்குறை வராது, மூச்சுத்திணறல் வராது என்றும் சொன்னார்களாம்.



இந்த அறிவுரையைக் கேட்டு நானும் அப்படிப் படுத்துப் பார்த்தேன். இருமலாய் வந்தது!

================

ஒரு ரூபாய்க்கு என்ன செலவு செய்யலாம் என்று ஓரிரு வாரங்கள் முன்பு பேச்சு வந்தபோது என் பிறந்த நாளுக்கு என் அப்பா ஒரு ரூபாய் கொடுத்து கேன்டீனில் சாப்பிட்டு வா என்று அனுப்பியது நினைவுக்கு வந்து சொல்லி இருந்தேன்.

அப்போது நாங்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி குடியிருப்பில் வசித்து வந்தோம். மருத்துவக்கல்லூரி அருகே ஒரு கேன்டீன் இருக்கும். அதில் இருக்கும் ஒரு விஷயம் என்னைக் கவரும். ஒரு டம்ளரில் முக்கால் அளவு பாலாடை போல எடுத்து வைத்திருப்பார்கள். அதைச் சாப்பிடவேண்டும் என்று ஆசை.

வீட்டில் பால் காய்ச்சப்படும்போது அதில் படரும் ஆடையை ஒரு ஸ்பூனில் எடுத்து சிறு தட்டில் போட்டு சாப்பிட்டு விடுவேன், சமயங்களில் லேசாக சர்க்கரை தூவிச் சாப்பிடுவேன். அம்மா திட்டமாட்டாள். என்னை அந்த விஷமம் செய்ய அனுமதிப்பாள்.

அப்பா ஒரு ரூபாய் கொடுத்த உடன் கேன்டீனுக்குச் செல்லும்போது இது நினைவுக்கு வந்து ஆர்வமாகச் சென்றால், அது மாலையில்தான் இருக்குமாம். இத்தனூண்டு பையன் தனியாய்ச் சாப்பிட வந்திருக்கிறானே என்று ஏதாவது சொல்வார்களோ என்று பார்த்தேன். அப்பாவுடன் என்னைப் பார்த்திருப்பதால் அவர் ஒன்றும் சொல்லவில்லை.



பெரிய மனுஷனாய் அமர்ந்து இரண்டு இட்லி, ஒரு தோசை சாப்பிட்டேன். தங்கைக்கு ஒரு செட் பூரி பார்சல் சொல்லும்போதே ஒரு எண்ணம். கூடுதலாக ஒரு செட் பூரி பார்சல் வாங்கிக்கொண்டேன். மந்தார இலையில் வைத்துக் கட்டித்தரப்படும் அந்த பூரி அப்புறம் வீட்டில் சாப்பிட அவ்வளவு சுவையாக இருக்கும்!



இட்லி எட்டு பைசாவோ, பத்து பைசாவோ… தோசை 15 பைசா என்று ஞாபகம். பூரி 18 பைசா என்று ஞாபகம். எனவே மிச்சம் வேறு சில்லறை கொடுத்தார் கேன்டீன் காசாளர். கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தேன்!

தங்கைக்கு நான் பார்சல் வாங்கியது குறித்து அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சந்தோஷம்!

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## கதம்பம் :: ஸ்ரீராம்

**ஒரு பழைய திகில் கவிதை!**

Sriram Balasubramaniam
October 6, 2014 ·

'இரவில்
தனியாக இருக்கிறோமே
விளக்கை அணைக்க வேண்டுமா என்ன?'
என்று யோசித்தபோது
'வேண்டாம் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது'
என்றது
அருகில் ஒரு குரல்...



**கொரோனா காலம் கற்றுத் தந்த பாடம் குறித்து, தி.மு.க., தலைவர் ஸ்டாலினின் மனைவி துர்கா:**



"இந்த கொரோனா காலம், நம் மக்களுக்கு பல உண்மைகளை புரிய வைத்துள்ளது. அதில் முக்கியமானது, உடலுக்கு நல்லது செய்யும், இயற்கையாக விளைந்த, நஞ்சில்லாத காய்கறிகள், பொருட்களை பயன்படுத்தத் துவங்கியுள்ளோம்.

நோய் எதிர்ப்பு சக்தியை தரும் கஷாயம், காய்ச்சப்படாத வீடுகளே இல்லை என்றாகி விட்டது. வீடுகளின் ஒரு ஓரத்தில், கற்பூரவல்லி, துளசி, ஆடாதொடா, தூதுவளை போன்ற மூலிகைச் செடிகளை வளர்க்கத் துவங்கி விட்டோம்.

அதுபோல, நல்ல கீரைகள், பழங்களை தேடிச் சென்று, வாங்கி பயன்படுத்துகிறோம். மேலும், எவ்வளவு சின்ன வீடாக இருந்தாலும், வீட்டுக்கு இரண்டு தொட்டிகளில், பிடித்தமான மூலிகை, பூச்செடிகளை மக்கள் வளர்க்கத் துவங்கியுள்ளனர்.

எனக்கும் செடி, கொடிகள் மீது எப்போதும் ஆர்வம் அதிகம். எங்கு சென்றாலும், அங்கிருந்து ஏதாவது ஒரு செடியை வாங்கி வந்து, வீட்டில் வளர்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளேன். காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதுார் செல்லும் வழியில் எங்களுக்கு ஒரு சிறிய தோட்டம் உள்ளது.

கடந்த, 1986ல் அதை வாங்கினோம். நேரம் கிடைக்கும் போது என்றில்லாமல், அடிக்கடி அந்த தோட்டத்திற்கு, குடும்பத்துடன் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளோம்.அங்கு, எனக்கு பிடித்தமான பல செடி, கொடிகள், மரங்கள், மூலிகைகள், பழ மரங்களை வளர்க்கிறேன். அங்குள்ள செடி, கொடிகளை பார்ப்பதற்கு, அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.அந்தத் தோட்டத்தில், வீட்டுக்குத் தேவையான அனைத்து மூலிகைச் செடிகளையும் வைத்துள்ளேன்.

காய்கறிகளும், கொஞ்சம் போட்டுள்ளேன். சென்னையில் வீட்டு மாடியில்

வைத்துள்ளது போல, அந்தத் தோட்டத்திலும், துளசி, கற்பூரவல்லி, முசுமுசுக்கை, முடக்கத்தான், தூதுவளை போன்றவை வளர்கின்றன.

தூதுவளை செடியைப் பார்த்தாலே, எங்க மாமா, கருணாநிதி ஞாபகம் தான் வரும். லேசாக சளி இருந்தாலும் போதும், தூதுவளை துவையல் செய்யச் சொல்லி, சாதத்துடன் பிசைந்து சாப்பிடுவாங்க; அப்படியே சளி குறைந்து விடும்.

கோபாலபுரம் வீட்டின் பின்புறம், சிறிய தொட்டியில், தூதுவளை செடிகளை, அத்தை வைத்துள்ளார். எப்போதெல்லாம் மாமா, தூதுவளை துவையல் கேட்பாரோ, அப்போதெல்லாம், அந்தச் செடியிலிருந்து, சில இலைகளை வெட்டி, துவையல் அரைத்து கொடுப்பார்.

இப்பவும், எங்கள் வீட்டில் அடிக்கடி தூதுவளை துவையல் உண்டு.அதுபோல, மலை நெல்லி மரம் தோட்டத்தில் உள்ளது. அதன் காய்களை பறித்து வந்து, கொத்துமல்லி தழை, கறிவேப்பிலை, மிளகு, சீரகம் கலந்து, மிக்சியில் அடித்து, நெல்லி மோர் அருந்துவது, எங்கள் வீட்டில் இப்போதும் வழக்கம்!

**சொல்கிறார்கள் - 5-10-20 தினமலர்.**

==================================



எழுத்து சீர்திருத்த முறை பற்றி பேசும்போது கீதா அக்கா பழைய முறையிலேயேதான் இன்னமும் எழுதுவதாகச் சொல்லி இருந்தார். பேனாவால் உங்களுக்கு அந்த நிமிடம் தோன்றும் சப்ஜெக்டில் எதையாவது ஒரு பாரா எழுதி அனுப்புங்களேன்...



**அதாவது பேப்பரில் எழுதி அதைப் புகைப்படம் எடுத்து அனுப்பினால் வியாழனில் பிரசுரிக்கலாம். கையெழுத்து, எழுத்துமுறை, சப்ஜெக்டின் சுவாரஸ்யம் எல்லாம் எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்! ஒரு சுவாரஸ்யம்தான்!**

==================================

**பொக்கிஷம் பகுதிக்கு சில ஜோக்ஸ் மட்டும்...**

**எதையும் சோதித்துப் பார்த்து விடுவது நல்லது!**



## "படவா...  மாட்டினியா?!"




''ஐயையோ! இப்பிடி நல்லா இருந்த என்னோட முன் பல் நாலேயும் அநியாயமா பிடுங்கிட்டீங்களே, டாக்டர்..!''

''இனிமே என் பெண் போகிற இடமெல்லாம் பல்லைக் காட்டிக்கிட்டு பின்னால சுத்தமாட்டியே! அதுக்காகத்தான்!''

— டி. சந்தர்

# மின்நிலா 022

## "கண்டுபிடிச்சுட்டீங்களா?"



''ஏண்டா?.. டான்ஸ் மாஸ்டர் கம்ப்ளெய்ன் பண்ணாரு.. நேத்திக்கு 'நாதர்முடி மேலிருக்கும் நல்ல பாம்பே' பாட்டுக்கு நெளிஞ்சு நெளிஞ்சு டான்ஸ் ஆடிக்கிட்டே நைஸா கிளாஸை விட்டு ஓடிப் போயிட்டியாமே!''

## ஐடியா அய்யாசாமி!




மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

## பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்

### துள்ளும் அலையென அலைந்தோம்... நெஞ்சில் கனவினைச் சுமந்தோம்

**பானு அக்காவின் நேயர் விருப்பத்தில் 'சிட்டுக்குருவி' படத்தில் இடம்பெற்ற 'என் கண்மணி' பாடல். அப்போது வானொலியில் பரபரப்பாக அடிக்கடி ஒலிபரப்பப் பட்ட பாடல். இளையராஜா அப்போது பாடல்களில் சில புதுமைகளை புகுத்தி வந்தார். அதில் இதுவும் ஒன்று..**

**ஒரு வருடத்துக்கு முன்பு டாக்டர் ஜெகதீஷ் பத்மநாபன் என்பவர் இந்தப் பாடல் இடம்பெற்றுள்ள பக்கத்தில் எழுதி இருப்பதை அப்படியே இங்கே காபி பேஸ்ட் செய்கிறேன்...**

‘என் கண்மணி’ பாடல் பற்றி இளையராஜா கூறியதாவது:

கவிஞர் வாலி, இரவு நேரம் என்றும் பாராமல் வந்தார். அவரிடம் இதை விளக்கியபோது, டியூனை வாசிக்கச் சொல்லிக் கேட்டார். ‘ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு டியூன்கள் ஒரே நேரத்தில் இசைத்தால் முரணாகத் தோன்றாதா?’ என்று கேட்டார்.

நான் அவரிடம், “அண்ணே! இரண்டு டியூனும் தனியாக பாடப்பட்டால் அதனதன் தனித்தன்மை மாறாமலும், ஒரு டியூனுக்கு இன்னொரு டியூன் பதில் போலவும், அமைய வேண்டும். அந்த பதில் டியூனும் தனியாகப் பாடப்பட்டால் அதன் தனித்தன்மை மாறாமல் இருக்க வேண்டும். இரண்டையும் சேர்த்து பாடினால், ஒட்ட வைத்தது போல இல்லாமல், ஒரே பாடலாக ஒலிக்க வேண்டும்” என்றேன்.

பதிலுக்கு வாலி, “என்னையா நீ? இந்த நட்ட நடு ராத்திரியில ‘சிட்டுக்குருவிக்கு சிண்டப் பிச்சுக்கிற மாதிரி ஐடியா கொடுக்குறே? முதல்ல ஒரு ‘மாதிரி’ (Sample) பாடலைச் சொல்லு!” என்றார்.

உடனே வேறு ஒரு பாடலைப் பாடி விளக்கினேன். நான் ஒரு டியூனையும், அமர் ஒரு டியூனையும் பாடி அவருக்கு இன்னும் தெளிவாக்கினோம்.

ஆண் : பொன் பெண் : மஞ்சம் ஆண் : தான் பெண் : அருகில் ஆண் : நீ பெண் : வருவாயோ?

- இப்படிப் பாடிக்காட்டினோம். அதாவது ஆண் பாடுவதைத் தனியாகவும், பெண் பாடுவதைத் தனியாகவும், பிரித்துப் படித்தால், தனித்தனி அர்த்தம் வரும்.

அதாவது 'பொன் தான் நீ' என்கிறான் ஆண்.

மஞ்சம் அருகில் வருவாயோ?' என்கிறாள் பெண்.

இரண்டையும் சேர்த்துப் பாடும்போது, 'பொன் மஞ்சம் தான் அருகில் நீ வருவாயோ?' என்று பொதுவாக இன்னொரு அர்த்தம் வரும்.

'சரி' என்று புரிந்ததாகத் தெரிவித்த வாலி, கொஞ்சம் யோசித்தார். பின்னர் கையில் Pad-ஐ எடுத்தவர் யாருக்கும் காட்டாமல் அவர் எழுதும் பாணியில் மளமளவென்று எழுதினார். பாடல் என் கைக்கு வந்தது. இரண்டு பேரும் பாடும்போது தனித்தனி அர்த்தங்களும், மொத்தமாய் பாடும்போது பொதுவான அர்த்தமும் வருவது மாதிரியே வாலி

எழுதியிருந்தது எல்லோருக்குமே பிடித்துப் போயிற்று. 'என் கண்மணி' பாடலைப் பிரித்துப் படித்துப் பாருங்கள். என் கண்மணி இளமாங்கனி, சிரிக்கின்றதேன்? நான் சொன்ன ஜோக்கைக் கேட்டு நாணமோ? உன் காதலி உனைப்பார்த்ததும் சிரிக்கின்றதேன்? நீ நகைச்சுவை மன்னன் இல்லையோ? என் மன்னவன் எனைப் பார்த்ததும் கதை சொல்கிறான் அம்மம்மா இன்னும் கேட்கத் தூண்டுமோ? உன் காதலன் ஓராயிரம் கதை சொல்கிறான் நீ ரசிக்கின்றக் கன்னியில்லையோ? இப்படி அழகாக இரண்டு அர்த்தம் வரும். கவிஞர் வாலி அவர்களுக்கு இந்த விஷயத்தை விளக்கி அவரிடம் வரிகளை வாங்கிய இசைஞானியைப் போலவே, விஷயத்தை உள்வாங்கிக் கொண்டு அற்புதமாக எழுதிய வகையில் கவிஞர் வாலியும் ஒரு 'கவி ஞானி' தான்!

>>>>> **YOUTUBE LINK**

======================

**இனி என் விருப்பத்துக்கு வருகிறேன்.**

**பச்சிலைகளையும் கரித்தூளையும் அரைத்து, அதன் மரச்சட்டங்களில் கறை படியாமல் ஸ்லேட்டில் தடவி காயவைத்து புது சிலேட்டு எஃபெக்ட்டுடன் பள்ளி சென்ற நாட்கள்**

**ஸ்லேட்டிலேயே தேர்வுகள் எழுதி மார்க்குகள் வாங்கிய நாட்கள்**

**காய்கறி வாங்கும் பையில் சிலேட்டு, புத்தகங்களை நிரப்பி, உள்ளே சிறு டிபன் பாக்ஸையும் சொருகி, தோளில் பின்பக்கமாகத் தொங்க விட்டுக்கொண்டு பள்ளி சென்ற நாட்கள்**

பள்ளி செல்லும்போதும், திரும்பும்போதும் ஓட்டை டிராயர் கழன்று விடாமல் ஒரு கையால் ஏற்றிக்கொண்டு, அரட்டை அடித்துக்கொண்டு, செங்காயாக புளியங்காயை பையில் நிரப்பி ஆசிரியருக்குத் தெரியாமல் வகுப்பில் உப்பு சேர்த்து புளிப்பாகக் கடித்த நாட்கள்

'பீட்டி' பீரியடில் ஃபுட்பால் என்று பந்தைத் துரத்திக் கொண்டு, பந்து செல்லும் திசையெல்லாம் ஓடி, தப்பித்தவறி பந்து கால் பக்கம் வரும்போது பந்தை உதைக்கிறேன் என்று கல்லை உதைத்து காயம் பட்டு அல்லது பந்து கால்களில் அகப்படாமல் சறுக்கி விழுந்த நாட்கள்.. முழங்காலில், கட்டை விரல் அருகிலும் காயம் சாஸ்வதம்!

